Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா; 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 06 ( 20 - 05 - 1991 ) திங்கட்கிழமை ஓசை: 91

## கூ. சங்க லொறிகளுக்கு 20லீற்றர் டீசலே அனுமதி

(வவுனியா)

வவுனியா இராணுவசோதனை முகாமைத்தாண்டிச் செல்லும் கூட்டுறவுச் சங்க லொறிகளுக்கு இருபது லீற்றர் டீசல் மட்டுமே அரச உத்தரவாத விலைக்கு வழங்கப்படுகிறது. வடமாகாணத்தின் அத்தனை பகுதிகளிலும் உள்ள கூட்டுறவுச் சங்க லொறிகள் மேற்படி அளவிலேயே வவுனியாவில் டீசலை பெற்றுக்கொள்கின்றன என்றும் மேலதிக (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரியில் நிகழ்ந்த நான்கு நாள் குண்டுவீச்சால்

# வல்வெட்டித்துறைக்கு 22 கோடி ரூபா சேதம்

(செ. த. மை)

வல்வெட்டித்துறையில் கடந்த ஜனவரி இருபதாம் திகதி தொடக்கம் இருபத்துமூன்றாம் திகதிவரை தொடர்ச்சியாக நான்கு நாட்கள் இடம் பெற்ற சிறிலங்கா அரசின் போர் விமானங்களின் குண்டுத் தாக்குதல்களால் 21 கோடியே 99 லட்சத்து 22 ஆயிரத்து 593 ரூபா 55 சதம் சேதமேற்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வ மதிப்பீடு தெரிவிக்கிறது.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமசேவை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட சேத மதிப்பீட்டின் விபரம் பின்வருமாறு:

முழுமையாக சேதமடைந்த முந்நூற்றுமூன்றுவீடுகளினதும் கட்டடம், கால்நடை, வாகனம், இயந்திரங்கள், தளபாடங்கள், தொழில் உபகரணங்கள், மின் உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் ஆகியவற்றின் மொத்தப் பெறுமதி 4 68 71,300 ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம் வீரவேங்கை சார்ள்ஸ்

வல்வெட்டித்துறை கடற் பகுதியில் கடந்தஐந்தாம்திகதி யன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் காயமடைந்திருந்த வீரவேங்கை சார்ள்ஸ் (பொன்னுச்சாமி கருணாகரன் இன்பருட்டி, பருத்தித்துறை) என்பவர் நேற்று முன்தினம் வீரமரணம் அடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சிறிலங்கா அரசாங்கம் சமாதானத்தையும் அமைதியையும் புதைகுழியில் போட்டுள்ளது - கருணாரத்னா

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அமைதியையும், சுதந்திரத்தையும் இந்த அரசு சவக்குழிக்குள் போட்டுப் புதைத்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் போராடுகிறோம் என்ற பெயரில் வடக்கிலும், கிழக்கிலும் பெருவாரியானஉடைமைகளும், உயிர்களும் அழிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, தெற்கில் ஜே.வி.பி. யுடன் போராடுகிறோம் என்ற பெயரில் 40,000 இளைஞர்களை அழித்துள்ளதுஎன்று நவசமசமாஜக் கட்சிக் கூட்டத்தில் பேசிய கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா தெரிவித்தார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக தமிழ் தேசிய இனப்பிரச்சினையும்,இளைஞர்பிரச்சினை (6ஆம் பக்கம் பார்க்க)

## தனிநபர் ஆணைக்குழு வாக்குமூலம் பதிவு செய்ய பிரான்ஸ் பயணம்

(கொழும்பு)

வவுனியா, புதுக்குளம் பகுதியில் கடந்த 3ஆம் திகதி இடம் பெற்ற சிறிலங்கா விமானக் குண்டு வீச்சுச் சம்பவத்தில் காயமடைந்து தாய்நாடு திரும்பிய பிரான்சிய எம். எஸ் எப் நிறுவன பிரதி நிதிகளின் வாக்கு மூலங்களை எப்பதிவு செய்ய சிறிலங்கா ஜனாதிபதியின் தனி நபர் ஆணைக்குழு இன்னும் சில தினங்களில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படை இனி இலங்கை வராது - தொண்டமான்

(கொழும்பு)

ராஜீவ் காந்தியும் இந்தியத் தலைவர்களும் பல தவறுகளை உணர்ந்துவிட்டனர். ஆகையினால் இன்னொரு முறை இந்தியப் படையினை இலங்கைக்கு அனுப்ப மாட்டார்கள் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வு பெற்ற பின்பும் கடமைக்குச் சென்ற அதிபர்

(நல்லூர்)

உரும்பராயில் தலைமை ஆசிரியர் ஒருவர் ஓய்வு பெற்றும் ஓய்வில் நிற்க விரும்பவில்லையாம். நீண்ட காலம் அதிபராகவிருந்த பழக்கதோஷம் அவரை விட்டுவைக்கவில்லை. ஓய்வு விண்ணப்பம் முறைப்படி யாழ். கல்வித் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட இந்தத் தலைமை ஆசிரியர் பாடசாலையில் வழமைபோல் தனது கடமைகளைச் செய் (6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கைதாகிய 50பேர் பற்றி தகவலில்லை

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்கள் பற்றியும் காணாமல் போனவர்கள் பற்றியும் எதையும் அறிய முடியாத நிலையில் உறவினர்கள் தவிக்கின்றனர்.

கடந்த வருடம் ஜூன் மாதத்தின் பின்னர் வவுனியா நகரப்பகுதியிலும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள்ளான பகுதிகளிலும் சுமார் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்களை இழிவுபடுத்தல்; இளைஞருக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்திரைச்சந்தைப் பகுதியில் சில இளைஞர்கள் பெண்களுடன் முறைகேடான பேச்சுக்களில் ஈடுபடுவது குறித்து விடுதலைப்புலிகளுக்கு தொடர்ந்து முறைப்பாடுகள் வந்ததையிட்டு நேற்று யாழ். மாவட்ட பிரதித் தளபதி காஸ்ரோ முத்திரைச்சந்தையில் உள்ள ஆட்டோ சொந்தக்காரர்கள், துவிச்சக்கர வண்டி உரிமையாளர்களை அழைத்து அவதானத்துடன் இருக்க வேண்டும்என்று எச்சரித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்ட 22பேர் இன்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருபத்திரண்டுபேர் இன்று மாலை நான்கு மணியளவில் வலிகாமம் பிரிவுச் செயலகத்தில் விடுதலைசெய்யப்படவுள்ளதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. இன்று விடுதலை செய்யப்படவுள்ளோரின் விபரம் வருமாறு:

பிரான்சிஸ் டானியல் (மரவிப் பாஞ்சான், இளிநொச்சி) நல்லையா இராசலிங்கம் (தம்பாலை, அச்சுவேலி), நவரத்தினம் சந்திரவதனன் (கோயிலாக்கண்டி, கைதடி), ஞானமுத்து கருணாகரன் (முகுந்தன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிரமம் பாராது ஒத்துழைக்கவும்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபரொருவர் காவலிலிருந்து தப்பியோடிவிட்டதால் அவரை மீண்டும் கைது செய்வதற்காக வீதிகளில் திடீர் சோதனைகள் நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

இச் சோதனை நடவடிக்கைகளுக்கு சிரமத்தைப் பாராது ஒத்துழைப்புத் தரும்படி பொது மக்களிடம் புலிகளின் வட்டாரங்கள் கேட்டுக் கொண்டுள்ளன.

## விரிவுரையாளர் மாணவியிடம் பகிரங்க மன்னிப்பு

(நல்லூர்)

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணவியிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினார்.

பலர் முன்னிலையில் கலைப் பிரிவு மாணவியை விரிவுரை (6 ஆம் பக்கம் பார்க்க)

## ராதா நினைவஞ்சலிக் கூட்டம்

இன்று மாலை 6 மணிக்கு முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதியும், யாழ் மாவட்டத் தளபதியுமான லெப். கேணல் ராதா அவர்களின் 4ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் ஐயனார் கோவிலடி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறும். இதில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அரசியல் பிரமுகர் (6ஆம் பக்கம் பார்க்க)

## அமெ, படை பங்களாதேஷில்; ராஜீவ் காந்தி கவலை

(புதுடில்லி)

பெரிய வல்லரசின் படைகள் இந்தியாவின் எல்லையருகில் வந்திருப்பது குறித்து இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கவலைதெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வடக்குக் கிழக்குப் பகுதியில் தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் பேசுகையில் பங்களாதேஷில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்க இராணுவத்தினர் குறித்து ராஜீவ் காந்தி கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், வளைகுடாப் போருக்குப்பின் (6ஆம் பக்கம் பார்க்க)

# நினைவு கூருகின்றோம்

## 1991-05-20

000000000000000000000000000



லெப். கேணல்
ராதா



லெப்டினன்ட்
கோணேஸ்



கப்டன்
ரமேஸ் மாஸ்டர்

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரமரணமடைந்த
★ எஸ். மயிலவாகனன் – (புலிபாய்ந்த கல்)

1987-ம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைநத

லெப். கேணல் ராதா (கனகசபாபதி ஹரிச்சந்திரா — ஹரிச்சந்திரா வீதி, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்)

இதே ஆண்டு வளலாய் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

லெப். கோணேஸ் —(இரத்தினம் தவராசா—நாவற்காடு, அச்சுவேலி தெற்கு)

1988 ஆம் ஆண்டு ஊறணி மானாங்கானைப் பகுதியில் இந்தியப் படையின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

கப்டன் ரமேஸ்மாஸ்டர் (பொன்னையா சிவஞானசுந்தரம் — பொலிகண்டி)

இதே சம்பவத்தில் வீரமரணமடைந்த

2ஆம் லெப். ஜீவா (தம்பிராசா சத்தியமூர்த்தி, பொலிகண்டி)

ஜெயம் (துரைசிங்கம் சிறீதரன், மானாங்கானை, வல்வெட்டித்துறை)

1989ஆம் ஆண்டு முள்ளிக்குளத்தில் தேசவிரோதிகளின் முகாம் மீதான தாக்குதலில் வீரமரணமடைத்த

கப்டன் அமலன் (அ. அமலதாஸ், காத்தான்குளம், மன்னார்)

கப்டன் குலம் (பொன்னுத்துரை யோகராசா ரவி, செல்வபுரம், பூநகரி)

கப்டன் புதுமை (பே. வரதகுமார், வாமதேவபுரம், அடம்பன்)

கப்டன் சபேசன் (சீமான் இமானுவேல் இராசரட்ணம், பரிகாரிகண்டல், மன்னார்)

லெப். நாயுடு (க. ஜெயசீலன், பள்ளக்கமம், முருங்கன்)

2ஆம் லெப். சுரேஸ் (சண்முகம் சத்தியசுரேஸ், திருநெல்வேலி வடக்கு)

2ஆம் லெப். சிவம் ஆபிரஹாம் முருகையா, கள்ளிமோட்டை)

லெப். மாக்ஸ் (பத்மநாபன் சசிக்குமார், தட்சணாமருதமடு, மன்னார்)

2ஆம்லெப்.கர்ணன் (கிட்ணன் சிவகுமார், நல்லூர், பூநகரி)

பீற்றர் (செபஸ்தியாம்பிள்ளை சகாயராஜா, கருங்கண்டல், அடம்பன்)

வீமன் (பிலிப் றேச் நிரஞ்சன் - சாவற்காடு, மன்னார்)

இதே ஆண்டு வீரமரணமடைந்த

டொமினிக் (செந்தில், புங்குடுதீவு)

இதே ஆண்டு ஏறாவூரில் கோயில் திருவிழாவில் கலந்துகொண்டோர்மீது தேசத்துரோகிகள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் உயிரிழந்த 17 பொதுமக்கள் ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்

B/ 2498 — விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி



கப்டன் அமலன்



கப்டன் புதுமை



கப்டன் சபேசன்



கப்டன் குலம்



லெப்டினன்ட் மாக்ஸ்



லெப்டினன்ட் நாயுடு



2 ஆம் லெப். சுரேஸ்



2ஆம லெப. கரணன



2ஆம். லெப சிவம்



வீமன்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய

# 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

காலம்: **22, 23-6-1991**

இவ்விழாவை முன்னிட்டு பல போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

1. நாடகப் போட்டி (சமகால நிகழ்வுகளை சித்திரிக்கும் நாடகங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)
2. உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி. (யாழ் மாவட்ட கழகங்களுக்கான [லீக்] அனுமதியுடன் நடாத்தப்படவுள்ளது) [7 பேர் கொண்டகுழு]
3. எறிபந்தாட்ட சுற்றுப் போட்டி (7 பேர் கொண்ட 12 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கொண்டது.)
4. கரபந்தாட்ட சுற்றுப் போட்டி (6பேர் கொண்டது)

போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 25-5-91 க்கு முன்பாக நிலைய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கொ. மே. ச. ச. நி.
நிர்வாகம்

(B / 2545)

# 6ஆம் மாத நினைவஞ்சலி

## சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

(சிங்கம் தொழிலக பங்காளர்)

பாலாவோடை - காரைநகர்

தோற்றம் 04-08-1958 மறைவு 24-11-1990

திதி: 20-05-1991

(வைகாசித் திங்கள் வளர்பிறை ஸப்தமி திதி)

காரைநகர் மண்ணில்
வந்துதித்த ரத்தினமே!
எங்கள் குடும்பத்தின்
சொத்தான செல்வமே!
உங்களது பிரிவால்
எழுகின்ற துயர அலை
என்றும் மறையாது
எங்கள் நினைவுகளில்!

'அன்னை இல்லம்'
பதவளை வீதி,
கல்வியங்காடு.

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, மக்கள்,
சகோதரர், சுற்றம்.

(B-2546)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## நடராஜா மதிதரன் (B.Sc.Hons)

(Demonstrator திறந்த வெளிப் பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட)

ஆண்டவன் படைப்பு: 11-09 1963
அநியாய அழிப்பு 20-04-1991

அன்புச் சுடரால் அனைவருக்கும் ஒளியூட்டி
கனிவான மொழியாலே கவலைதனை உடனகற்றி
கல்வியிலே பெருமகனாய் உலவிவந்த முழுமதியே!
தாண்டிக் குளத்தினிலே கல்லாகிப் போய்விட்ட
கயவர்களின் ரவைகள் வெறியாகி விரைந்து வந்து
உன் மார்புதனைத் துளைத்ததுவே!
பிரிவுத் துயர் தாளவில்லை
துன்பக் கடலினிலே துடியாத் துடிக்கின்றோம்.
மீளாத் துயில் கொள்ளச் சென்றனையோ?
மாதம் ஒன்றானாலும் மாறாத நினைவுடனே
நிதமும் மாய்கின்றோம் நாம்.

நந்தாவில்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

உமது பிரிவால் துயருறும்
தாய், பெரியதாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

(R/ 1394

## ஹரியத் சட்டத்திற்கு பாகிஸ்தானில் அங்கீகாரம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இஸ்லாமிய ஹரியத்சட்டம் நடைமுறைப் படுத்துவதற்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. பலத்த வாக்குவாதங்களையும் விவாதங்களையும் தோற்றுவித்த இச்சட்ட மூலம் இஸ்லாமிய மத அடிப்படை வாதத்தை நிலை நிறுத்துவதாகவும், ஜனநாயக விரோதமான தாகவும், பெனாசிர் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி கூறியுள்ளது. ஹரியத் சட்டம் பாராளுமன்றத்தைப் பலவீனப்படுத்துவதாகவும், பெண்ணுரிமைகளை மறுப்பதாகவும், லிபரல் வாத முஸ்லீம்களும், பெனாசிர் பூட்டோவும் குற்றம் சாட்டியுள்ளனர். இச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் மீண்டும் பெனாசிர் ஆட்சி வர முடியாமல் தடுக்கலாம் என அரசாங்கம் விரும்புகிறது.

## தொழிற் கட்சி வெற்றி

(லண்டன்)

பிரித்தானியாவில் நடைபெற்ற பாராளுமன்ற இடைத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றிபெற்றுள்ளது. வேல்ஸில் உள்ள மொஸ்மார்க் தொகுதியில் நடைபெற்ற இந்த இடைத்தேர்தலில் கொன்சவேற்றிவ் கட்சி முன்னர் பெற்ற பெரும்பான்மை வாக்குகளைக் காட்டிலும் கூடுதலான வாக்குகளை தொழிற்கட்சி பெற்றுள்ளது.

இந்த வெற்றியானது அடுத்த பொதுத் தேர்தலில் பத்து ஆண்டுகளுக்கு மேலான கொன்சவேற்றிவ் கட்சியின ஆட்சியினை முடிவிற்கு கொண்டுவருமென தொழிற்கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது

## எல்லையில் படைக்குறைப்பு

(மொஸ்கோ)

சீன-சோவியத் எல்லையில் இருக்கும் சோவியத் படைவீரரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து இருபதாயிரத்தால் குறைக்கப்படவுள்ளது.

சுமார் 6500 கி.மீ. நீளமான எல்லையில் நீடிக்கும் பதட்டத்தைத் தணிவிக்கும் முகமாக இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சோவியத் அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

## திடீர்மரணம்

(செ.த.மை)

நேற்று முன்தினம் அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்த செல்லையா (வயது 40) என்பவர் வட்டுக்கோட்டை ஆலயமொன்றுக்கு சென்று திரும்பி வரும் போது புன்னாலைக்கட்டுவன் சந்தியில உள்ள ஓர் தேநீர்க்கடையில் தேநீர் அருந்தியவுடன் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் மரணமானார்.

## கொள்ளை

(செ.த.மை)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலில் 17 5 91 இரவு 11 மணியளவில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இரும்புக்கம்பிகள் உடைய கொண்டு முன்வாசல் கதவை உடைத்து உட்சென்ற திருடர்கள் ஆலய உட்கதவுகளையும் உடைத்து சுமார் 4250/- ரூபா பெறுமதியான தங்கப்பொட்டு, பட்டு நூலகள் எவர்சில்வர் பாத்திரங்களை திருடியுள்ளதாக மேற்படி ஆலயக் குருக்கள் குஞ்சுக்கிளி ஐயர் அவர்கள் தெரிவிக்கின்றார்.

## தவறி வீழ்ந்து இளைஞர் மரணம்

(செ.த.மை)

சீவல் தொழிலில் ஈடுபட்டிருந்த இளைஞர் மரத்திலிருந்து வீழ்ந்து மரணமானார்

கடந்த வெள்ளி இப் பரிதாப சம்பவம் இடம் பெற்றது. கீரிமலை-கூவிலிருந்துஇடம் பெயர்ந்து வந்த த.நாகராசா (26 வயது) என்பவர் விளான் கடாப்புலம் என்னுமிடத்தில் சீவல் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் தவறி வீழ்ந்து மரணமானார்.

### யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப்

# பொதுக் கூட்டம்

25.05.1991 அன்று இடம்பெறவிருந்த மேற்படி கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களால் 09.06.1991 காலை8.30மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தர விரும்புகின்றேன். வருட சந்தாப்பணம் கட்டாத அங்கத் வர்கள் தமது சந்தாப்பணத்தையும், மதிய உணவு பெற விரும்பும் அங்கத்தவர்கள் அதற்குரிய கட்டணம் 30/- ரூபாவையும் 01.06 1991க்கு முன்னர் திரு. என் உலகநாதன், உப பொருளாளரிடம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அங்கத்தவர்களுக்கான தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பப்படவுள்ளது. இருந்தும், தற்போதுள்ள நிலைமையில் அழைப்பிதழ் இடைக்கப்பெறாவிடினும் இவ்வறிவித்தலையும் அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளுமபடி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர் பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(B 2543

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திரு. சின்னத்துரை துரைலிங்கம்

மலர்வு: 1932-03-12 உதிர்வு: 1991-04-21

எங்கள் குடும்பத் தலைவரின் மரணச்சடங்கில் பங்கு கொண்டும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் நாளை (21-05-1991) செவ்வாய் அன்று நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

509 கே. கே. எஸ் வீதி,
[illegible] திரு.
[illegible] ணம்.

— குடும்பத்தினர்

(R-1400)

**30. 4. 91 இல் யாழ் நகர் கடைச்சாமித் தெருவில இடம்பெற்ற வெடிவிபத்தில் பலியான பன்னிரு**

## புலிகளின் நினைவாக....

★ லெப். அப்பா (குமாரசிங்கம் சுந்தரலிங்கம்) ★ பெரியசாமி நாகேஸ்
★ தேவதாஸ் லோறன்ஸ் ★ செல்வம் காமினி
★ பாலகிருஷ்ணன் சிறீதர் ★ செலஸரின் ஆனந்தராஜ்
★ சுப்பிரமணியம் மதியழகன் ★ தர்மன் ஸ்ரிபன்
★ திருநாவுக்கரசு பவிந்திரன் ★ சிவப்பிரகாசம் சிறிகாந்த்
★ கார்த்திகேசு குமார் ★ ஆறுமுகம் சிவனேசன்

எதிரிகள் பாசறையை தேடியே அழித்திட
சீறிடும் வேங்கையாய் அணியினில் சேர்ந்தனர்!
முறையாக எதிரியைக் குறிகொண்டு தாக்கிட
வேங்கைகள் தானையாய் வீறுடன் நடந்தனர்!

களந்தனில் நின்றுதம் கொள்கையை வென்றிட,
தீராத வேட்கையில் வேங்கையாய் மாறினர்!
வேட்கைகள் தணியமுன் வெடிகுண்டு விபத்திலே
பன்னிரு வேங்கைகள் பட்டென்று போயினரே!

அரியாலைப் பிரதேச
சனசமூக நிலையங்கள் (B-2537)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் ரமேஷ் மாஸ்ரர்**
**( பொ. சிவஞானசுந்தரம் )**

இறப்பு
**20. 5. 1988**

பாசத்தின் பிறப்பிடமே! பண்பின் உறைவிடமே! நெஞ்சம் நிறைந்தவனாய், சமூகத்தின் சேவகனாய், விளையாட்டுவீரனாய், புரட்சிக் கலைஞனாய், ஒளிர்ந்தவனே! காலம் சுமத்திய வரலாற்றுக் கடமைக்காய் காலத்தை வென்று காவியமானவனே! அஞ்சலிப் பூக்களைத் தூவி அர்ச்சிக்கின்றோம்.

நவின்டில் றோட்,
பொலிகண்டி. - குடும்பத்தினர்

(R/139)

## வரி விளம்பரம்

**தேவை**

மலைவேம்பு விதை தேவை.
மில்க் வைற், யாழ்ப்பாணம்.
(B/2578)

## காசோலைகளை பெறவும்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்கள் தமது ஆசிரியர்களுக்கான வைகாசிமாத சம்பளக் கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகளை இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு மேற்படி கல்விக் கோட்டத்தில் பெற்றுக் கொள்ளும்படி இக்கோட்டத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

## கைகலப்பில் முடிந்த உதைபந்தாட்டம்

(மல்லாகம்)

விளையாட்டுச் கழகங்கள் இரண்டுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டம் கைகலப்பில் முடிந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் திருமலை ஸ்ரார் கழகமும் சிறிமுருகன்கழகமும் மோதின.

இம்மோதலில் ஏற்பட்ட அதிருப்தியினால் இரண்டு கோஷ்டிகளும், அதன் ஆதரவாளர்களும் பலத்த கைகலப்பில் ஈடுபட்டனர்.

இத்தாக்குதல் நடவடிக்கைகளின்போது மேற்படி பாடசாலைத்தளபாடங்களும்பயன் படுத்தப்பட்டன. இதனால் அவை பலத்த சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. இச்சம்பவத்தில் பலர் காயமடைந்தனர். (ச)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்க விசேட பொதுச்சபைக் கூட்டம் இன்று திங்கள் மாலை 3 மணியளவில் சம்பந்தன் வைத்திய சாலை மண்டபத்தில் இடம் பெறும்.

பலமுக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அனைத்து ஆங்கில மருந்து வர்த்தகர்களையும் சமூகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

## 4-ம் ஆண்டு நினைவு தினம்

வீர ஜனனம்
02 - 09 - 1964



வீர மரணம்
20 - 05 - 1987

**லெப்டினனட் கோணேஸ்**
**இ. தவராஜா**
(நாவற்காடு - அச்சுவேலி)

கோணேஸ்!
நீ தமிழீழ மண்ணை நேசித்தாய்
மரணத்தை மறந்தாய்
நீ தமிழீழ மண்ணுக்காய்
செய்த தியாகம்
சரித்திரம் உள்ளமட்டும் வாழும்
நாலாண்டென்ன நூறாண்டு மறைந்தாலும்
மாறாது நம் கவலை
மறையாது உன் நினைவு

அச்சுவேலி வாழ்.
மக்கள்

குறிப்பு: 20-5-87 அன்று வளலாய் பகுதியில் ஸ்ரீலங்கா ராணுவத்துடன் நடைபெற்ற மோதலில் பல இராணுவத்தினரின் சடலங்களையும்பல இராணுவத்தினரையும் உயிருடனும் சரணடைய செய்த சமயம் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் சரணடைந்த இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில்வீர காவியம் படைத்த லெப்டினன்ட் கோணேஸ் வீர மரணம் அடைந்தார்.

B-2532)

## நினைவு அஞ்சலி



**தனபாலசூரியர் றஜந்தன்**
(யா/கனகரத்தினம் ம.வி. மாணவன்)

| படைப்பு | அழிப்பு |
| --- | --- |
| 22-02-1969 | 20-05-1985 |



**தனபாலசூரியர் குழலி**
(யா/கன்னியர்மடம் ம. வி. மாணவி)

| படைப்பு | அழிப்பு |
| --- | --- |
| 08-04-1972 | 09-11-1988 |

எம் இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இல. 5, வேலப்பர் ஒழுங்கை
அரியாலை,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் கலங்கும்
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
உறவினர்கள், மாணவ மாணவிகள்,
...சிரியர்கள், நண்பர்கள்.

(B/ 2533)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**ச. சத்தியசுரேஸ்**
**( சுரேஸ் )**

| ஜனனம் | வீரமரணம் |
| --- | --- |
| 17. 05 1972 | 20. 05. 1989 |

வயல் நிலத்தில் விளைந்த களை போல சுயவராய்
தாய் மண்ணில் தோன்றிய துரோகிகளை ஒழிக்கும் -செயல்
புரியும் வேளையில் வீரமரணத்தை விருப்போடு ஏற்ற
வீரனே நீயொரு வரலாறு.

கண்ணின் நீரதனைக் கொண்டு கழுவினால்
மண்ணின் துயரங்கள் மாறாது - கண்மணி
உம் பிரிவால் எழுந்த வேதனைகள்
எம் நெஞ்சில் நிலைக்கும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி (B-2544)

உற்றார், உறவினர்,
நண்பர்கள்

## ※ சிந்தனைக்கு ※

எமது நாடு பாலைநிலமா அல்லது பாறாங்கல்லால் நிரம்பியதா என்பதல்ல எமது பிரச்சினை. இது எமது நாடு என்று தலை நிமிர்ந்து நிற்க ஒரு நிலப் பரப்பு எமக்கு வேண்டும்.

— யாரோ


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 20.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## தமிழீழம் வளமற்றது; அர்த்தமற்ற பேச்சு

விடுதலைப் புலிகளுக்கு ஒருபோதும் ஈழ இராஜ்யம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் ஈழ இராஜ்யத்தைத் தோற்றுவித்தால் அவர்களுக்குக் கிடைக்கும் மூலவளங்கள் அந்த ஈழ இராஜ்யத்தை நடத்திச் செல்லப் போதாததாக இருக்கும். இதனால் நிறுவப்படும் ஈழ இராஜ்யத்தை வேறொரு சக்தி விழுங்கி விடும் என தமிழீழம் அமைவதால் தமிழருக்கு ஏற்படக்கூடிய 'அவலநிலை' குறித்து சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கவலை அடைந்துள்ளார்.

அதாவது தமிழீழம் அமைவதில் தமக்கொரு ஆட்சேபனையும் இல்லை தமிழர் சிரமப்பட்டு விடுவார்கள் என்பதனாலேயே தமிழீழம் அமைவதற்கு தாம் சம்மதிக்கவில்லை என்பதுபோல் உள்ளது சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சு. கடந்த காலத்தில் இலங்கையின் ஒருமைப்பாடு பிரதேச இறைமை, ஒற்றையாட்சி அமைப்பு போன்றவற்றைப் பாதுகாக்க தமிழருக்கெதிரான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிறிலங்கா ஜனாதிபதி, தற்பொழுது தமிழர்பால் கரிசனை கொண்டு அவர்களை அழிவில் இருந்து மீட்க தமிழருக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டி நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்போல் தெரிகின்றது.

சிறிலங்கா ஜனாதிபதி மட்டுமல்ல, தமிழ் மக்களில் சிலரும் குறிப்பாக சில ''புத்தி ஜீவிகளும்'' இலங்கையில் தமிழீழம் ஒன்று அமைவதற்குப் போதுமான பொருளாதார வளம் இல்லை எனக் கடந்த காலத்தில் வாதிட்டதும் உண்டு.

ஆனால், இவர்களின் வாதங்கள் ஏற்புடையவையல்ல. இன்று ஒரு நாட்டின் உற்பத்திக்குத் தேவையான வளங்கள் தனியாக உள்நாட்டில் மட்டும் பெறப்படுபவையல்ல. அவை உலகின் பல்வேறு பாகங்களிலும் இருந்து பெறப்படுபவையாகும். இன்று உலகம் வெகுவாகச் சுருங்கி விட்டது. இன்று மனிதன் சில மணி நேரத்தினில் அதி வேக விமானங்களில் உலகை வலம் வந்து விடுகின்றான்.

இன்று உலகம் போக்குவரத்தினாலும், தொலைத் தொடர்பினாலும் சுலபமாக இணைந்துள்ளது. இதற்கு விஞ்ஞான தொழில்நுட்பம் பெரிதும் உதவி புரிகின்றது. இந்நிலையில், ஒரு நாட்டின் வளம் வேறொரு நாட்டினால் பயன்படுவது வழக்கமாகிவிட்டதோடு தவிர்க்கப் படமுடியாததும் ஆகிவிட்டது. உலக நாடுகள் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டு, ஒன்றில் ஒன்றில் தங்கியிருக்கும் நிலை உருவாகி விட்டது. இந்நிலையில் வளப்பற்றாக் குறையால் ஒரு நாட்டை நிர்வகிக்க முடியாது எனக் கூறுவது திட்டவட்டமான ஏமாற்று நடவடிக்கை அல்லது அவர்களின் அறியாமை ஆகும்.

வளப்பற்றாக்குறையானாலும் ஒருநாட்டை நிர்வகிக்கலாம் என்ற வாதம் ஒருபுறம் இருக்கட்டும். தமிழீழப் பிரதேசத்தில் வளப்பற்றாக்குறை என எதைக் குறிப்பிடுகின்றார்கள் வளப்பற்றாக்குறை என்பது தனியாக கனிவளப் பற்றாக்குறையை மட்டும் மனதிற்கொண்டு கூறப்படும் கூற்றாகும் ஆனால், கனிவளம் தமிழீழப் பிரதேசத்தில் அறவே இல்லை என்பது ஒரு அபத்தமான கூற்றாகும். சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட புறக் கணிப்புக்களினால் தமிழீழ மண்ணில் கனிவளங்கள் கண்டறியப்படவில்லை என்பதே உண்மையாகும். அதே வேளை, சுண்ணக்கல், இல்மனைற் போன்ற கனிப் பொருட்கள் தரையின் மேற்பரப்பிலேயே உள்ளன. மேலும் அண்மைக்கால ஆய்வின் பிரகாரம் றைற்றேனியம் என்னும் பெறுமதி மிக்க கலப்பு உலோகம் கிழக்குக் கரையோரத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் எமது தேவைக்கு மேலதிகமான நில, நீர், கடல் வளங்கள் எம்மிடம் உண்டு. மருச்சுக்கட்டியில் இருந்து திருக்கோவில் வரையுள்ள நீண்ட கடற்பரப்பு எம்மிடமுண்டு. இது எமது பிரதான பொருளாதார வளமாகும். அத்தோடு எமது தேவைக்கு மேலதிகமான பரந்த நிலப் பிரதேசமும் எம்மிடமுண்டு.

நீர் வளத்தைப் பொறுத்து தரைக்கீழ் நீரும், மேற் பரப்பு நீரோட்டங்களும், பருவ மழையும் நாம் திறம்பட நிர்வகிக்கும் பட்சத்தில் எமது தேவைக்குப் போதுமான தாகும் இலங்கைக்கான பாகுபாட்டில் தமிழீழப் பிரதேசம் வறள் வலயமாக இருக்கலாம், ஆனால் உலக ரீதியான பாகுபாட்டிற்குள் தமிழீழப் பிரதேசம் ஈர வலயத்தினுள் அடங்குகின்றது

இந்நிலையில், தமிழீழப் பிரதேசம் வளமற்றது; நிர்வகிக்க முடியாதது என்பதெல்லாம் விதண்டாவாதப் பேச்சாகும். இன்று ஒரு நாட்டின் அபிவிருத்தி அந்நாட்டு மக்களின் கடின உழைப்பிலும் அந் நாட்டு அரசாங்கத்தின் திறமையான செயற்பாட்டிலும் முகாமைத் துவத்திலும் உள்ளதே ஒழிய வளத்தில் தங்கியிருக்க வில்லை அத்தோடு ஒரு சிறிய நாட்டின் பாதுகாப்பு அந்நாடு உலக அரசியலிலும், பொருளாதாரத்திலும் பெறும் முக்கியத்துவத்தில் உள்ளதே ஒழிய அதன் பரப்பளவில் தங்கியிருக்கவில்லை இவையே கடந்த கால வரலாறும், இன்றைய நிகழ்வும் உணர்த்தும் உண்மையாகும்.

# எல்லையோர அச்சுறுத்தலை எதிர்த்து நிற்கும் மணலாறு

சிங்கள அரசு மணலாற்றுக்குச் செய்யத்தக்க காரியங்களைச் செய்யாமல் விட்டதால் பொருளாதாரம் முடங்கி விடும் என்று எண்ணியது. குண்டு வீசிப் பொருளாதார நடவடிக்கைகளையும், மக்களின் ஆரம்ப பொருளாதார முயற்சிகளையும் நிலைகுலையச் செய்வதற்கு முன் அரசு பல தடைகளை விதித்தது ஆனால் மணலாற்றின் விவசாயம் இந்தத் தடைகளில் சிக்கிக் கொண்டு அழியவில்லை.

போராட்ட அடிப்படையில் விவசாயம்

விவசாய உள்ளீடுகளான எரிபொருள், விதைகள் விவசாய உபகரணங்கள் ஆகியன இப்பகுதிகளுக்கு வழங்காமல் தடை மேற்கொள்ளப் பட்டது. இப்பகுதி மக்கள் சிங்கள ஆட்சியால் சுமத்தப்பட்ட தடைகளிலிருந்தும், கட்டுப்பாடுகளிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டு ஒரு போராட்ட அடிப்படையிலேயே கமத் தொழிலை வளர்த்தனர்.

குடும்பம், குடியிருக்கச்சிறிய வீடு, பசுக்களுடன் எருமைகளும், ஆடுகளும் கோழிகளும் நம்பிக்கையான ஒரு எதிர் காலத்தை கேட்டுக்காட்டின நம்பிக்கைக் கிரணங்கள் ஒளிசிந்த ஆரம்பித்துவிட்டன.

கிராமங்களில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன தண்ணீர் முறிப்புக் குளத்தின் நீரைக் கொண்டு 800 ஏக்கர் நன்செய் நிலம் சாகுபடிக்கு ஒதுக்கப்பட்டது. இதில் 600 ஏக்கர் நிலம் பண்படுத்தி விளைச்சலுக்கு ஆயத்த நிலையில் இருந்தது. இதைவிடக் காலபோகத்தில் விளைந்த வயல்கள் சில அறுவடையை எதிர்பார்த்துத் தலைசாய்த்து நின்றன.

குமுளமுனை கமநலசேவைப் பிரதேசத்தில் 1327 விவசாயக் குடும்பங்கள் உள்ளன. அலம்பிலில் 265 விவசாயக் குடும்பங்களும், கொக்குத்தொடுவாயில் 530 விவசாயக்குடும்பங்களும் வாழுகின்றன

மே 1, 2 ஆம் திகதிகளில் குண்டுகள் வீசப்பட்டன நிலவிய நெருக்கடியில் குமுளமுனை மக்கள் வெளியேறினார்கள் இப்பகுதியில் மனித நடமாட்டம் குறைந்ததால், யானைகள் தென்னை மரங்களையும், நூற்று மேடைகளையும் அழித்து வருவதாகக் கமநலசேவை அதிகாரி தெரிவித்தார் இப்பகுதிகளில் எருமை, பசு, ஆடுகள் எல்லாம் கட்டாக்காலியாக அலைகின்றன. பதினைந்து மாதிரித் தோட்டங்களையும் கட்டாக்காலி மாடுகள் பதம் பார்த்து விட்டன

கருநாட்டுக்கேணியிலும் இதே கதைதான். இங்கு பாரிய விவசாய நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்றாலும் மரவள்ளி, நிலக்கடலை போன்ற உப உணவு உற்பத்தி கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

குமுழமுனை தண்ணீர் முறிப்புக்குளம் நன்நீர் மீன் பிடித்திட்டம் முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது செம்மலை அலம்பில் கிராமங்களில் மீன்பிடி நடவடிக்கைகளைக் காணமுடியவில்லை இத்தகைய சூழ்நிலை மே முதலாம் திகதி குண்டு வீச்சுக்கு முதலே ஏற்பட்டதாகும்.

குமுளமுனை, கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி, ஆண்டான்குளம் சின்னக்குளம், அக்கரைவெளி ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் இடம் பெயர்ந்து புதுக் குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய கிராமங்களில் ஒதுங்கி யுள்ளனர். முல்லைத்தீவு - கருதுபாறைப்பற்று உதவி அர

மதன்

சாங்க அதிபரின் நிர்வாக எல்லைக்குட்பட்டதுமணலாறு இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து இரண்டு வாரங்கள் ஆகியும், உதவி இவர்களுக்கு வழங்கப்படவில்லை இந்த விஷயத்தைப் பற்றி உ. அரசாங்க அதிபர் பணிமனையில் கேட்டபோது, உணவுப் பொருள்கள் கைவசமில்லை என்று கைவிரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் என்றால் எல்லாம் பெயருக்கு நடக்கும். அல்லது பெயரளவில் நடக்கும். இதைக் கூட மணலாற்றில் காணமுடியவில்லை.

கல்வி முயற்சிகள்

மணலாறு மாவட்டத்தில் மொத்தம் 7 பாடசாலைகள் உள்ளன. எல்லைக் கிராமம் மிகவும் கஷ்டமான சூழ்நிலையாக இருந்தும் ஆசிரியர் கற்பித்தல் நடவடிக்கைகளைக் கைவிடவில்லை. தான் பெற்ற கல்வி தன்னோடு போகாமல் அந்த நாலு பேருக்குக் கற்றுக் கொடுத்தார்கள். படிப்பு அப்பகுதி மாணவரின் முயற்சியையும், நம்பிக்கையையும் தூண்டி உற்சாகப்படுத்துவதாக இருந்தது.

தமிழரின் கல்வி வளர்ச்சி அச்சுறுத்தும் அரசியல் விளைவுகளை ஏற்படுத்தும் என்று கருதும் சிங்கள அரசு மணலாற்றுப் பள்ளிக் கூடங்களையும் விட்டு வைக்கவில்லை. ஆழ் கடலின் அடியில் ஆடாமல் கிடக்கும் பாறாங்கற்கள் போல் அமைதியாகச் செயற்பட்ட பள்ளிக்கூடங்கள் மீதும் அரச வான்படைகள் குண்டுகளை வீசின.

525 மாணவர் கல்வி பயிலும் கொக்குத்தொடுவாய் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், 157 மாணவரைக் கொண்ட கருநாட்டுக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, 167 மாணவரைக் கொண்ட கொக்கிளாய் கனிஷ்ட வித்தியாலயங்கள் பாரிய குண்டுவீச்சுக்கு இலக்கு இலக்காகியுள்ளன. மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் இல்லாததால் (விடுமுறை நாள்) உயிர்ச்சேதம் எதுவும் இடம் பெறவில்லை. பாதிக்கப்பட்ட பள்ளிக்கூடம் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2 லட்சம் அழிவு ஏற்பட்டிருப்பதாக கல்வித் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. இப்பாடசாலைகள் முற்றாகவே அழிந்துள்ளன.

மணலாற்றில் குண்டு வீச்சைத் தொடர்ந்து பள்ளிக் கூடங்கள் எதுவுமே இயங்கவில்லை. செம்மலை மகா வித்தியாலயம் (472 மாணவர்) குமுளமுனை மகா வித்தியாலயம் (950 மாணவர்), அலம்பில் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் (484 மாணவர்), ஆறுமுகத்தான் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (54 மாணவர்) எல்லாமே காற்று வாங்குகின்றன பெற்றோரும் ஆசிரியர்களும் பாதுகாப்புத் தேடி அயல் ஊர்களுக்குச் சென்றுள்ளதால் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டநிலையிலேயே உள்ளன.

வெளியேறிய மாணவர்களுக்கு மாற்று ஒழுங்குகள் பற்றி முல்லைத்தீவுக் கல்வித் திணைக்கள நிர்வாகத்தர் மட்ராஸ் மயிலிடம் கேட்டோம். அவர் கூறினார்:

மக்கள் முற்றாக வெளியேறினால் தற்காலிகமாகப் பாடசாலை நடத்துவது பற்றி யோசிக்கலாம் என்றார்.

கொத்தணி அதிபர் க. சரவணபவான், மணலாறு மக்கள் முழுமையாக வெளி போகவில்லை. வெளியேறியவர்களும் திரும்பி வருவார்கள் என்றார்.

இப்போதுள்ள நெருக்கடியானது தொடர்ந்து நீடித்தாலோ அல்லது வளர்ந்து பெருகினாலோ அதனால் மிக அதிகமான இடர் அனுபவிக்க வேண்டியவர்கள் மணலாறு எல்லைப்புற மக்களே. இந்த நெருக்கடியை வெற்றி கொள்ளவும், பொருளாதார துறையில் முன்னேறவும் துணை புரியக் கூடியவர்களின் சேவை இக்கால கட்டத்தில் இன்றியமையாதது.

(முற்றும்)

## துரித விவசாயத் திட்டத்தில் சிறுதானியச் செய்கை

துரித விவசாயத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள பன்னிரெண்டு கமநலச் சேவை நிலையங்களிலும் சிறு தானியப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி குரக்கன் 117 ஹெக்டேயரிலும் பயறு 73 25 ஹெக்டேயரிலும் கௌபி 172.5 ஹெக்டேயரிலும் உழுந்து 10 ஹெக்டேயரிலும் மரவள்ளி 33 ஹெக்டேயரிலும் பயிரிடப்பட்டுள்ளதாக உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியிலும் பார்க்க இது பன்மடங்கு அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிறப்பு பதிவுப் பத்திரம் கிளிநொச்சி வந்தது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு தேவையான பிறப்பு இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களுக்குரிய ஒரு தொகுதி புத்தகங்கள் வந்து சேர்ந்துள்ளன. கடந்த சில மாதங்களாக இப்பத்திரங்கள் பற்றாக்குறையால் இம்மாவட்ட மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர். (க)

## கடற்றொழில் பகுதியினருக்கு சம்பளமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பகுதியினருக்கு கடந்த ஏழு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

இவ்வூழியர்களுக்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதமே இறுதியாக சம்பளம் வழங்கப் பட்டது. இதன் பின்னர் நவம்பர் மாதம் யாழ். செயலக கட்டுநிதியில் இருந்து ஒரு பகுதி சம்பள முற்பணம் வழங்கப்பட்டது. தற்பொழுது முற்பணம்கூட வழங்கப்படாததால் இந்த ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (க)

# இந்திய பத்தாவது பொதுத் தேர்தல்; இன்று முதல்கட்ட வாக்குப் பதிவு

(சென்னை)

இந்தியாவில் பத்தாவது பொதுத் தேர்தலுக்காக ஒன்பது மாநிலங்களையும் நான்கு யூனியன் பிரதேசங்களையும் சேர்ந்த 204 மக்கள் அவைத் தொகுதிகளில் இன்று முதற் கட்ட வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

இதே நேரம் மேற்கு வங்காளத்தில் 294 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும், உத்தரப்பிரதேசத்தில் 425 தொகுதிகளில் 200 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும், ஹரியானாவில் 90 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் இன்று வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

சுமார் இருபது கோடி வாக்காளர்கள் 3900க்கும் அதிகமான வேட்பாளர்களிடையே இருந்து 204 மக்கள் அவைப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கிறார்கள்.

ஹரியானா ஹிமாசலப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம் ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், சிக்கிம் ஆகிய மாநிலங்களிலும் டில்லி, சண்டிகார், லட்சத்தீவு, அந்தமான், நிக்கோபார் ஆகிய மத்திய ஆளுகைப் பிரதேசங்களிலும் 204 மக்கள் அவைத் தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு இன்று நடைபெறும்,

துணைப் பிரதமர் தேவிலால், முன்னாள் பிரதமர்கள் ராஜீவ் காந்தி, வி. பி சிங், பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் எ. கே. அத்வானி, வாஜ்பாய் ஆகியோர் மக்கள் அவைத் தேர்தல்களிலும், மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு, உத்தர பிரதேச முதல்வர் மொலாயன் சிங் யாதவ் ஆகியோர் சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் களத்தில் உள்ளனர்.

இரண்டாவது கட்ட வாக்குப் பதிவு வரும் வியாழக்கிழமை 23ஆம் திகதி பதின்மூன்று மாநிலங்களிலும் இரண்டு மத்திய ஆளுகைப் பகுதியைச் சேர்ந்த 115 தொகுதிகளிலும்,

மூன்றாவது கட்ட வாக்குப் பதிவு இம் மாதம் 26 ஆம் திகதி தமிழ்நாடு உட்பட ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி மத்திய ஆளுகை பிரதேசத்தையும் சேர்ந்த 190 மக்கள் அவைத் தொகுதிகளிலும் நடைபெறவிருக்கிறது.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

உடுவிலைச் சேர்ந்த சபாரத்தினம் குமாரசுவாமி என்பவரது அடையாள அட்டை யாழ்ப்பாண நகரப் பகுதியின் கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஈழநாதம் அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## விபத்தில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் சந்திக்கருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் திருக்கோணமலையைச் சேர்ந்த சின்னராசா என்பவர் படுகாயமடைந்தார்.

திருக்கோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பில் தங்கியிருந்த சின்னராசா என்பவர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காக பெண்மணியொருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வரும்போது கொழும்புக்குச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் விபத்திற்குள்ளானதில் காயமடைந்துள்ளார்.

## கழுதை, எருமைகளிலும் தேர்தல் சின்னங்கள்

(சென்னை)

தமிழ்நாட்டில் தேர்தல் களம் நன்கு களை கட்டியிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. கழுதை, குதிரை, எருமை போன்ற கால்நடைகளில் கூட தேர்தல் சின்னங்கள் வரையப்பட்டுள்ளன. வள்ளுவர் கோட்டத்தில் தி மு. க வின் உதயசூரியனும், அ தி. மு. க வின் இரட்டை யிலையும், அருகருகாக வரையப்பட்டுள்ளன. பிரசார ஒலிபெருக்கி வாகனங்கள் நேருக்கு நேர் சந்திக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்து வருகின்றன. ஒலி, ஒளி கசெட்டுகள் இம்முறை தேர்தலில் பெருமளவு பயன்படுத்தப் பட்டு வருகின்றன. ஆனாலும் அரசியல் கட்சிகளிடையே போட்டி கடுமையாக நிலவினாலும் பொதுவாக கட்சித் தொண்டர்களிடையே பரஸ்பர நல்லிணக்கம் காணப்படுவதால் மோதல் சம்பவங்கள் தவிர்க்கப்படுவதாக தெரிய வருகிறது.

இந்தியப்

இந்தியப் பொதுத் தேர்தலில எந்தக் கட்சி வெற்றி பெற்று பதவிக்கு வந்தாலும் இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியர் நேரடியாக தலையிடப் போவதில்லை என்று நாம் உறுதியாக நம்பலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு முன்னர் இந்தியப்படையை அனுப்பியது போன்ற தவறினை இனி மேலும் இந்திய அரசியல் வாதிகள் செய்யமாட்டார்கள் என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

வாக்குமூலம்

பிரான்ஸ் செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியினை இந்த ஆணைக்குழுவிற்கு சிறிலங்கா அரசாங்கம் வழங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த கதரீன் ஜோன் பெற்றிக், பாரிக் பெற்றீசியா ஆகியோரின் சாட்சியங்களே பிரான்சில் பதிவு செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

## மாணவர் அவை அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக மாணவி செல்வி. சிவரமணி அகால மரணமடைந்தார். அவருக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தியுள்ளது.

சமாதானத்தையும்

யும் தீர்க்கப்படாமல் இருக்கிறது. இதனால்தான் வடக்கிலும், தெற்கிலும் இளைஞர் ஆயுதம் ஏந்திப்போராடும் நிலை வளர்ந்துள்ளது.

இன்று குறிப்பாக கிழக்கிலே ஆண், பெண் வித்தியாசமின்றி பொதுமக்கள் பட்டப்பகலிலேயே தூக்கிச் செல்லப்பட்டுக் கொலைசெய்யப்படுகிறார்கள் இன்றுகூட தெற்கில் மனித உடல்கள் வீதிகளில் எரிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. யு என் பி தேர்தலில் ஆதரவு கேட்டது தமிழர்பிரச்சினையை தீர்ப்பதற்காகவன்று. தங்கள் இராணுவ நடவடிக்கையைத் தீவிரமாக்குவதற்காகும்

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர் போஷாக்கின்மையால் அவதியுறும் அதே வேளை, அரசாங்கம் வடக்குக் கிழக்கு யுத்தத்தில் கோடிக்கணக்காகப் பணத்தைக்கொட்டுகிறது என்றார். அரசுக்கெதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தால் அடக்கப்படுகின்றனர், கடத்தப்பட்டிருக்கின்றனர். கொல்லப்படுகின்றனர் என்றார் அவர்.

ஓய்வு

துள்ளார். அதிபருக்கான ஆசனத்தில் அமர்ந்து பணிப்புரைகளை வழங்கியதுடன், ஆசிரியர் கூட்டத்தையும் நடத்தியுள்ளார்.

மேற்படி தலைமை ஆசிரியரின் சிபாரிசின் பேரில் கல்வித் திணைக்களத்தால் புதிதாக நியமனம்பெற்ற அதிபர் செய்வது அறியாது திணறியுள்ளார்.

சம்பவம் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு எட்டியது; ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் கல்வித்திணைக்களத்துக்கு அழைத்து, பாடசாலை அபிவிருத்திச் சங்க மூலம் பாடசாலைக்கு ஆற்ற வேண்டிய சேவைகளையும், ஆலோசனையையும் வழங்கும்படி புத்திமதி கூறப்பட்டது.

சுங்க அபராதம் தாமதித்தால்

## அபராதத்திற்கும் வட்டியும் செலுத்த வேண்டும்

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தால் விதிக்கப்படும் அபராதத் தொகையை செலுத்த தாமதம் செய்வோர் இக்காலதாமதத்திற்காக வட்டி செலுத்த வேண்டிபேற்படும். இவ்வாறு வட்டி செலுத்துவதற்கு ஏதுவாக சுங்கக் கட்டளைச் சட்டம் திருத்தப்படவுள்ளது. தவறிழைப்போர் மீது நீதி மன்றத்தில் வழக்கொன்றைப் பதிவு செய்த பின்னர் இவ் வட்டித் தொகையை அறவிடுவதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

கூ. சங்க

அளவில டீசல் நிரப்பிச் செல்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

ராதா

கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்கள். அத்தோடு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (44)

அமெ.

உருவாகிவரும் பாதுகாப்பு நிலவரம் சுதந்திரத்தையும், சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையையும் மதிக்கும் எந்தவொரு வளரும் நாட்டையும் கவலைக்குள்ளாக்கும் எனக்குறிப்பிட்டார்.

விரிவுரையாளர்

யாளர் தரக்குறைவாகப் பேசியுள்ளார். மாணவி நிந்திக்கப் பட்டது குறித்து மாணவர் தமது கண்டனத்தை பல்கலைக் கழக நிர்வாகத்திடம் தெரிவித்தனர். நிர்வாகம் தலையிட்டு, சம்பந்தப்பட்ட விரிவுரையாளரை பகிரங்க மன்னிப்புக் கோரும்படி வேண்டியது; விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் விரிவுரையாளர் மாணவியிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்:

வவுனியாவில்

ஐம்பதிற்கு மேற்பட்ட பொது மக்கள் காணாமல் போயுள்ளனர்.

இது சம்பந்தமாக வவுனியா அரசாங்க அதிபரிடமும், செஞ்சிலுவைச்சங்கத்திடமும் உறவினர்கள் தொடர்பு கொண்டு முறையிட்ட போதிலும் இது வரை அதற்கான பரிகாரம் இடைக்கவில்லையாம்.

கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பொன்னம்பலம் அருணகிரி (22 வயது) என்ற சுதுமலையைச் சேர்ந்த இளைஞர் பற்றி உறவினர்கள் இராணுவ அதிகாரிகளிடம் தொடர்பு கொண்ட போது, அவர் காணப்பட்டால் அறிவிக்கிறோம் என்று பதில் கிடைத்ததாம்.

வவுனியா நகரப் பகுதியிலும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் நடமாடும் பொதுமக்களின் உயிர்களுக்கு உத்தரவாதமில்லாத நிலை நீடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

வல்வெட்டித்துறை

இதேபோல் பகுதியாகச் சேதமடைந்த தொளாயிரத்து தொண்ணூற்றி நான்கு சேத மதிப்பீடு மொத்தமாக 4, 34, 97, 000 ரூபா எனவும், சேதமடைந்த நூற்றுப் பதினொரு வாடகை வீடுகளின் மொத்தச் சேதமதிப்பீடு 37, 51, 975 ரூபா எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட பதினேழு இந்துஆலயங்களும், கிறிஸ்தவ ஆலயமொன்றும், ஆறு பாடசாலைகளும், நகரசபைக் கட்டடம், பரு. ப. நோ. கூ. சங்கம் மற்றும் நாற்பது வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளன. இவற்றின் மொத்த சேத மதிப்பீடு 12,58,22,318 ரூபா என கணிக்கப்பட்டிருக்கிறது; கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வெளியிடப்பட்ட மேற்படி விபரங்களில் 11பேர் மரணமடைந்ததாகவும், 25பேர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச முன்னாள் தலைவரும், ஸ்தாபகருமாகிய அமரர். ச. ஞானப்பிரகாசம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் புதன் கிழமை காலை 9-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தடுத்து

வீதி, உடுவில்) பூச்சி புஷ்பரட்ணம் (ஆனந்தபுரம், கிளிநொச்சி), பிறைசூடி சிவேஸ் (செல்வநகர், கிளிநொச்சி), ஜீவராசா சிவகுமார் (நெட்பானா விசுவமடு), நாகலிங்கம் மகேந்திரன் (வவுனியா) சின்னத்தம்பி மாணிக்ராசா (நெசக்குளம், வவுனியா), மலையாண்டிராசா (சிவபுரம், வவுனியா), கறுப்பையா அழகர்சாமி (சாம்பல் தோட்டம் வவுனியா), கந்தப்பு பரமசிவம் (நெசக்குளம், வவுனியா), கூழாங்குளம் வவுனியாவைச் சேர்ந்த கனகசபை தயாபரன் அருளானந்தம் மைக்கல், அந்தோனி பேணாட் ஜோசப், பழனிவேல் பேரின்பராசா, கறுப்பன் வேலு மாரிமுத்து செல்வம், பழனிவேல் நாகநாதன் அழகேஸ் பரமசிவம், மொட்டையன் துரைசாமி, பாலசிங்கம் ராஜு [தவசிகுளம் மிருசுவில்] ஆகியோர் இன்று விடுதலையாகவுள்ளனர்.

பெண்கள்

இந்தக் கூட்டத்தில் அவர் பேசும்பொழுது ஒரு பகுதியில் இளைஞர்கள் உயிரையே கொடுத்து யுத்தக் களத்தில் போராடிக் கொண்டிருக்கும் அதேவேளை இந்த இளைஞர்களின் சகோதரிகளை, தாய்மாரை மற்றொருபகுதி இளைஞர்கள் இப்படியான கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகம் செய்வது சகித்துக் கொள்ள முடியாததாகும் என்றார்.

மேலும் எமது பண்பாட்டுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் இந்தப் போராட்ட காலகட்டத்திலேயே பெண்கள் சுதந்திரமாக எமது மண்ணில் உலவ முடியாதநிலை இருக்குமானால் அதை எம்மால் அனுமதிக்க முடியாது.

இந்தச் சம்பவங்கள் குறித்து நாம் உடனடி நடவடிக்கை எடுப்போமானால் எமது மண்ணில் அகதிகளாக்கப்பட்ட, ஏழைகளாக்கப்பட்ட மக்களே இந்தத் தொழிலில் ஈடுபடுவதால் அப்பாவிகளும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டு விட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். ஆகவே இத்தகைய சம்பவங்கள் குறித்து அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார்.

இறுதியாக எமது போராட்டத்தை மழுங்கடிப்பதில் சிறிலங்கா அரசு எடுத்து வரும் முயற்சிகள் ஒருபக்கமிருக்க இத்தகைய சேஷ்டைகள் மறுபுறமாக எம்மின மக்களைத் திசை திருப்பிவிட இடமுண்டு. ஆகவே இத்தகைய சேஷ்டை செய்பவர்களுக்கு தண்டனை விதிக்கப்படும என்றும் குறிப்பிட்டார்: (லோ)

## மரண அறிவித்தல்

### செல்வி சிவரமணி சிவானந்தன்

(யாழ்; பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவி)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான சிவரமணி சிவானந்தன் 19 - 05 - 1991 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற சிவானந்தன் (உப அதிபர், யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி), சுகிர்தம் (இளைப்பாறிய ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) தம்பதிகளின் அன்பு மகளும், சிவசக்கா (யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)வின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 20 - 05 - 91 இன்று நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

130, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி சுகிர்தம் சிவானந்தன்
(R/1401)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் ஆம் 20 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது